

19-2

# The Prayers of Two men

# இரண்டு மனிதருடைய ஜெபம்

## லூக்கா 18 : 9–14

ஜெபம் செய்வதென்பது இருதயத்தோடு இருதயம் தேவனோடு பேசுவதாகும். நாம் சுகவீனமாயிருக்கையில் சுகம் கொடுக்க அவரை கேட்கிறோம். நாம் கடவுளிடத்தில் பாவத்திற்கு மன்னிப்ப கேட்கிறோம். ஏனென்றால் இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார். நாம் நமக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கிறோம். நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். ஏனென்றால் அவர் மிகவும் நல்லவராய் நமக்கிருக்கிறார்.

ஒரு நாள் இரண்டு மனிதர்கள் ஜெபிக்கும்படி தேவாலயத்திற்குப் போனார்கள். ஒரு மனிதன் தேவாலயத்திற்கு முன்பு நின்று : தேவனே! நான் மற்றவர்களைப் போல இராததினால், நான் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்த மனிதனாய் இருப்பதினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்றார். தான் மற்றவர்களைக் காட்டிலும் நல்லவன், நல்லது செய்தவன் என்பதற்கு தற்பெருமையுள்ளவனாய் இருந்தான். மற்றொரு மனிதன் ஜெபம் பண்ணுவதற்கு வந்தான். அவன் ஆலயத்தின் ஒரு மூலையிலே நின்று கீழே பார்த்து "தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்றான். அவன் தனக்குத்தானே வெட்கமடைந்தவனாய், அவன் தற்பெருமை இல்லாதவனாய், ஆனால் தேவனே நான் உமக்கு விரோதமாக பாவம், தப்பு செய்தேன் என்று சொன்னான். அவன் கடவுளிடத்தில் தன் பாவங்களை மன்னிக்கும்படி கேட்டான், இயேசு ஜனங்களுடைய யோசனைகளை அறிந்தவராயிருந்தார் யார் ஒருவன் தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்பை கேட்கிறானோ அவன் இரட்சிக்கப்பட்டவனாய் தன்னுடைய வீட்டிற்கு போவான் என்று இயேசு சொன்னார் அந்த மனிதனுடைய ஜெபத்தினால் கடவுள் சந்தோஷமடைந்தார் தற்பெருமை பாராட்டின வேறோரு மனிதனுடைய ஜெபத்தை அங்கீகரிக்கவில்லை.

## ஜெபம்

அன்பு ஆண்டவரே, நாங்கள் தப்பு, பாவம், செய்கிறோம் உம்முடைய பாவ மன்னிப்பைப் பெறகாத்திருக்கிறோம் ஆமென்.

### வளர்ந்த பிள்ளைகளுக்குரிய வேதாகம வசனமனப்பாடபகுதி சங்கீதம் 32 : 5

"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன். தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்".